வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் குன்னூர் கிராம

ஊராட்சித் தலைவர் / செயல் அலுவலரின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.எம்.ஜெகதீஸ்வரி

ந.க.எண்:05/2024-2025 நாள்:21.06.2024

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் - வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் – குன்னூர் ஊராட்சி – குன்னூர் கிராமம் – சர்வேஎண்247/ செ 95 மற்றும் சர்வே எண் 248/2 செ 74 ம் பரப்பளவு இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கி - உத்தரவிடல்

பார்வை: 1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்- விருதுநகர் அவர்களின் கடிதம் ந.க.எண்.WQOKKHLG/2024/TCP நாள்:21,06,2024

2. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் – விருதுநகர் மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் – ம.வ/ந.ஊ.து.இ (விருமா) எண். 73/2024(0) நாள்: 21,06,2024

உத்தரவு:

1. வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் – குன்னூர் ஊராட்சி – குன்னூர் கிராமம் சர்வே எண் 247/2 செ 95 மற்றும் சர்வே எண் 248/2 செ 74 ம் பரப்பளவு இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப அங்கீகாரம் பார்வை (1) ல் கண்ட கடிதத்தின்படி சில நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது

2. குன்னூர் சார்பதிவக ஆவண எண். 2294/2024, நாள்: 14.06.2024 2295/2024, நாள்: 14.06.2024 மூலம் பொது உபயோகத்திற்கான இடங்கள் மற்றும் சாலைகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஒதுக்கிய இடங்களும் இவ்வலுவகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. பார்வை (1) ல் காணும் கடிதத்தில் நகர் ஊரமைப்புத் துறையின் முன் அனுமதி பெறப்படும் மேம்பாடுகளுக்கு கூராய்வு கட்டணம் ரூ 2,000/-, ம் மற்றும் மனை 1க்கு ரூ:1,000/- வீதம் 37 மனைகளுக்கு பல்வகை ரசீது எண்: 18084 ன் படி ரூ 37,000/- (ரூபாய் முப்பத்தி ஏழாயிரம் மட்டும்) மும் நிலப் பயன் மாற்றக் கட்டணமாக சந்தை மதிப்பீட்டில் 3 விழுக்காடும் செலுத்த

வேண்டும் என்ற அடிப்படையில் மனுதாரரின் இடத்திற்கான சந்தை மதிப்பில் 3% நிலப்பயன்மாற்றக் கட்டணமாக பல்வகை ரசீது எண்.18085 ன் படி ரூ.15,210/- (ருபாய் பதினைந்தாயிரத்து இருநூற்று பத்து மட்டும்) மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

4. எனவே பார்வை (1) ல் கண்ட கடிதத்தில் அனுமதி அளிக்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதலின்படியும் இணைந்து வரப் பெற்றுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின் அடிப்படையிலும் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டு விட்டதாலும் குன்னூர் ஊராட்சி குன்னூர் கிராமம் சர்வே எண் 247/2 செ 95 ம் மற்றும் சர்வே எண் 248/2 செ 74 ம் பரப்பளவு உள்ள மனைப் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பொதுப்பயன்பாட்டு இடங்கள் நீங்கலாக மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின்படி 1 முதல் 37 வரையிலான மனைகளுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

5. பார்வை (1) ல் கண்ட கடிதத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் முழுமையாக கடைபிடிக்கப்பட வேண்டும்

இணைப்பு

வரைபடம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்

தலைவர்
குன்னூர் ஊராட்சி
வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம்

குன்னூர் ஊராட்சி வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம்
நாள்: 21/06/24

தலைவர்

குன்னூர் ஊராட்சி

பெறுநர்

1) திரு.சபாநாயகம் த/பெ சண்முகம்
பிளாட் எண் 2 அபார்ட்மெண்ட்
அரசரடி,மதுரை தாலூகா.

2) வெங்கடேசன் க/பெ சுந்தரராஜன்
எல்.எல் ரோடு, கதவு எண் 19,
சுப்பிரமணியபுரம், மதுரை தாலுகா.